நியாயமாகக் கிடைக்கவேண்டியவர்களுக்கு கார்டுகள் கிடைப்பதற்கும் புதிய கார்டுகள் அச்சடிப்பதாகச் சொன்னார்கள். அது இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக கிடைப்பதற்கு அரசு நடவடிக்கையெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, புதியதாக அச்சடித்து நாம் விநியோகிக்க இருக்கிற குடும்பக் கார்டுகளை எந்த அளவிற்கு நல்லமுறையில் விநியோகம் செய்யலாம் என்பதைப் பற்றி அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். முடிந்தால் ஆங்காங்கே மக்கள் பிரதிநிதிகளை வைத்துக் கொண்டு இந்த குடும்பக் கார்டுகளை விநியோகம் செய்தால் அது உரியவர்களுக்குப் போய்ச் சேர வாய்ப்பிருக்கிறது. ஆகவே எந்த அளவிற்கு விநியோகம் செய்வதில் சீர்திருத்தம் செய்யலாம் என்பதைப் பற்றி அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும். இந்தப் புதிய கார்டுகளை நாம் தந்துவிடுவோமானால் போலி கார்டுகளுக்கு இடமிருக்காது. மீண்டும் வேண்டுமானால் போலி கார்டுகளை அச்சடிக்க முயற்சிக்கலாம். ஆனாலும்கூட அரசாங்கத்திலே நம்முடைய அச்சகத்திலே இதற்கென்று விசேஷமாக கார்டுகளை அச்சடிப்பதற்கு நாங்கள் சொல்லியிருக்கிறோம். ஆகவே அதை ட்யூப்ளிகேட் பண்ணுவது என்பது அவ்வளவு லேசான காரியமல்ல.

சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

*150—(*வினா எண் 4693)* திரு. கி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் மேலும் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதை தொழில் துறையில் பின்தங்கிய மங்களபுரம் பகுதியில் ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

1987 நவம்பர் 17]

திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் அதிகமாகக் கரும்பு உற்பத்தியாகிற நிலங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் ஒரே ஒரு சர்க்கரை ஆலைதான் இருக்கிறது. இப்போது மாநில அரசும், மத்திய அரசும் சர்க்கரை ஆலைகளுக்கு புதியதாக உரிமம் கொடுத்துக் கொண்டிருப்பதால், அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயப் பெரு மக்கள் நல்ல பயனைப் பெறும் வகையில் மேலும் ஒரு சர்க்கரை ஆலையை வாழைப்பாடி பகுதியிலாவது அல்லது அதற்கு அருகில் இருக்கிற மங்களபுரம் பகுதியிலாவது ஆரம்பிக்க அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, சேலத்தில் ஏற்கெனவே கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று இயங்கி வருகின்றது. ஆகவே மேற்கொண்டு ஆலை அமைக்கிற உத்தேசம் எதுவும் தற்போது இல்லை.

நெல்லித்துறை ஊராட்சி மன்றத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

151—(*வினா எண் 9830) **திருமதி பி. லட்சுமி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லித்துறை ஊராட்சி மன்றத்திற்கென பவானி ஆற்றை ஆதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்கும் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும்?

(ஆ) அதனால் பயன்பெறும் பகுதிகள் எவை?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பவானி ஆற்றை ஆதாரமாகக் கொண்டு நெல்லித்துறை ஊராட்சி மன்றத்திற்கு ரூ. 8,56,100 திட்ட மதிப்பீட்டில் குடிநீர் வழங்கு திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்கு மண்டல தலைமைப் பொறியாளர் அவர்களின் ஆய்வில் உள்ளது. திட்ட ஒப்புதல் பெற்று திட்டம் 1987-88 நிதி யாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(ஆ) இத்திட்டத்தினால் நெல்லித்துறை ஊராட்சியிலுள்ள நெல்லித்துறை குடியிருப்பு பயனடையும்.

திருமதி பி. லட்சுமி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எந்த ஆண்டு முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.